தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்

**M.C.O.P. No.2869 of 2017** **04.11.2025**

**ம.சா.1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

என்னுடைய வயது, வருமானம், தொழில் ஆகியவற்றைக் காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வங்கி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் வருமானம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வங்கிக் கணக்கு புத்தகம் தாக்கல் செய்துள்ளது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இலவச சிகிச்சை வழங்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது மாட்டு தீவன வியாபாரம், நெல் வியாபாரம் கமிஷன் அடிப்படையில் செய்கிறேன். ம.சா.ஆ.8-ல் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களுக்கான மருத்துவரின் பரிந்துரை சீட்டு இல்லாததால் மேற்படி ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் மருத்துவ செலவிற்கு ரூ.1,00,000/- மும், மருத்துவமனைக்கு சென்று வர ரூ. 25,000/- மும், உதவியாளருக்கு ரூ.25,000/- க்கு மேலும் சிறப்பு மற்றும் ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.25,000/-மும் கேட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றும், தற்போதும் நான் வேலை பார்த்து வருமானம் ஈட்டிவருகிறேன் என்றும், எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் TN-31 AD-6910 இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து சென்றேன். அந்த வாகனம் என்னுடைய பெரியப்பா மகனுக்கு சொந்தமானது. அந்த வாகனத்தை பாக்கியராஜ் என்பவர் ஓட்டினார். அவரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி நபரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.2-ல் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் வண்டியில்

சென்றுகொண்டிருந்த போது நாய் குறுக்கில் வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் வண்டியின் பின்னால் சரியாக அமர்ந்து வராததால் என் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும், பின்னால் அமர்ந்து வரும் நபரை உட்படுத்தி காப்பீடு செய்யப்படாததாலும், 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்டஈடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் மிகைப்படுத்தி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.